## மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

2012 ஒக்டோபர் மாதம் 09 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

**நிகழ்ச்சி நிரல்**

I. **தவிசாளரின் அறிவிப்புகள்**

II. **அறிக்கைகளையும் , ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

VI. **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

VII. **அமைச்சுக்களின் அறிவிப்புகளும் / அமைச்சர்களின் தகவல்களும்**

VIII **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

*IX. **தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கை***

01 கௌரவ அசோகா லங்காதிலக உறுப்பினர்»»:

“ நாட்டில் விவசாயத்தினை மேம்படுத்துவதற்காக தற்போதைய அரசு பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. “பயிர் வளர்ப்போம் நாட்டைக் கட்டி எழுப்புவோம் ”, “திவி நகும” , மற்றும் “ உர மானியத்தினை வழங்குதல் ” போன்ற நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் உச்ச அளவில் மரக்கறி , மற்றும் பழங்கள் என்பன பெறப்படுகின்றன. மரக்கறி , மற்றும் பழங்கள் குறைவாகக் கிடைக்கும் காலங்களில் மரக்கறி மற்றும் பழங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் , அக்காலத்தில் மேலதிகமானவை உபயோகமின்றி அழுகுவதைக் காணமுடிகின்றது இந் நிலைமை விவசாயிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் , அதேபோல் நாட்டின் முழுப் பொருளாதாரத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்»துகின்றது . எனவே உணவு உற்பத்தியினை அதிக கூடிய காலத்திற்கு வைப்பதற்கு ஏற்றமுறையில் உரிய முறையினைத் தயாரித்து விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி, விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தவிர்க்கவும் , பாவனையாளர்களுக்கு நீதியான விலையில் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யவும், சந்தர்ப்பத்தினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்த மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது.”
(பி/v(01) / 12 / 08)

02. கௌரவ லலித் எல்லாவெல உறுப்பினர்»»:

"எங்கள் நாட்டிற்கு அன்னியச் செலாவாணியைப் பெருமளவு பெற்றுத்தரும் வீட்டுப் பணிப் பெண்களாக வெளிநாடு செல்லும் பெண்கள் வெளிநாட்டில் தொடர்ச்சியாக வீட்டில் முகம் கொடுக்க ஏற்படும் இம்சைகளுக்குத் தீர்வாக மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிற்கிணங்க தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சியின் பின் அரசின் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பினை வழங்கும் தாபனங்களின் மூலம் வேலைக்கு அனுப்புமாறும் , இம்சைகளுக்கு உட்படுத்தும் நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுக்கு அனுப்புவதை இடைநிறுத்தும் படியும் வேண்டுகோள் விடுத்து கௌரவ மாகாண சபை உறுப்பினர் லலித் எல்லாவெல அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையினை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கவும் தீர்மானிக்கப்பட்டது."

(யோ /v(01) / 12 / 11)

## X சபை ஒத்திவைப்பு பிரேரணை

கே.எச்.டி.கே சமரக்கோன்
செயலாளர்,
மேல்மாகாண மாகாண சபை

2012.09.26ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.